திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு பாதகம் அளிக்கக் கூடிய சட்டத்தை நிறைவேற்ற வேண்டாம் என்று சொல்லியும் அமைதிக்குப் பங்கம் வரும் என்று சொல்லியும் இச்சட்டத்தை நிறைவேற்றுவதால், ஜனதா கட்சி இதை எதிர்த்து வெளி நடப்பு செய்கிறது.

(ஜனதா கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்) குறுக்கீடு).

திரு. ஆ. நடராசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம், இச்சட்டம் தொழிலாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் என்று எதிர்க் கட்சிகள் எடுத்துச் சொல்லியும், வெள்ளைக்காரர் காலத்தில் கூட கொண்டுவராத சட்டத்தை கொண்டு வந்து அதை நிறைவேற்றியதைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

(ஐ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1987.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 8/1987) ** ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தை பிரிக்கப்படும் மாவட்டங்களுக்கும் அமல்படுத்துவது குறித்த சட்ட முன்வடிவு, மேற்படி கேளிக்கை வரிச் சட்டத்தை கன்னியாகுமரி, திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்படுவது குறித்த சட்ட முன்வடிவின் மீது கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இதிலே இருக்கிற ஒருசில குறைபாடுகளை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து இந்தச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றுகிறபோது கீழ்க்கண்ட விவரங்களைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

** 1987 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 7ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

கேளிக்கை வரி டிக்கட்டின் மேலே வரி விதித்தபோது தவறுகள் நடைபெறுகின்றன என்ற காரணத்திற்காக அதை கம்பௌண்டிங் முறையாக மாற்றிக் கொண்டு வந்தோம். ஆனால் இப்போதும் பல தவறுகள் நடைபெறுகின்றன. 15 காட்சிகள் நடத்துகிற திரையரங்குகள், 10 காட்சிகள் என்று கணக்குக் கொடுத்து வரி ஏய்ப்பு செய்கிற நிலை இருக்கிறது. சாதாரண ஏழை எளிய மக்கள் கொடுக்கக்கூடிய கேளிக்கை வரியை அரசினுடைய கணக்கிலே சேர்க்காமல் இடையில் இருக்கிறவர்கள்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தச் சட்ட முன்வடிவு பிரிக்கப்பட்ட திருநெல்வேலி மாவட்டத்தையும் ஷெடியூலில் சேர்ப்பது பற்றியது. டிஸ்டிரிக்ட்டை பைஃபர்கேட் செய்து, அந்த பைஃபர்கேட் செய்யப்பட்ட மாவட்டத்தையும் ஷெடியூலில் சேர்த்து, ஏற்கனவே இருக்கிற சட்டத்தின் ஆளுகைக்குள் கொண்டு வருவதுதான் இந்தச் சட்ட முன்வடிவின் நோக்கம். அதன் மேல் கருத்துத் தெரிவிக்காமல், கேளிக்கை வரி ஏய்ப்பு, காட்சிகள் கணக்கு தவறாகக் கொடுப்பது என்று பேசிக்கொண்டு போனால் என்ன ஆவது? எனவே ஸ்கோப் ஆஃப் தி பில்லில் பேசுங்கள்.

திரு. கோ. வீரய்யன் : துணைத் தலைவர் அவர்களே, பிரிக்கப்பட்ட கன்னியாகுமரி மாவட்டத்திலே நடைபெறுகிற தவறுகளைத்தான் குறிப்பிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது எப்படி 'பில்'லிலே வரும். சட்ட முன்வடிவு 'டாக்ஸை'ப்பற்றி இருந்தால் பேசலாம். இது டிஸ்டிரிக்ட் பைஃபர்கேஷன் பற்றியது. வேறு ஒன்றும் இல்லை, இதிலே, அடுத்த பில்லில் நீங்கள் வேறு விஷயங்களைப் பேசலாம். இதில் வரியைப் பற்றியெல்லாம் பேசினால் நேரம்தான் வீணாகும்.

திரு. கோ. வீரய்யன் : நேரம் இல்லையென்ற காரணத்திற்காக பேசக்கூடாது என்றால் இதில் உள்ள தவறுகளை எப்படிச் சுட்டிக்காட்ட முடியும்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரம் இல்லையென்று சொல்லவில்லை. ஸ்கோப் ஆஃப் தி பில்லை விட்டு வேறு விவரங்களைப் பேசுவதால் நேரம் வீணாகும் என்றுதான் சொன்னேன். நான் உறுதியாகச் சொல்கிறேன், நீங்கள் இப்போது பேசுவது வித்தின் தி ஸ்கோப் ஆஃப் தி பில், இல்லை. இன்னும் சொல்லப்போனால் இந்த பில்லில் பேசுவதற்கே ஒன்றும் இல்லை.

திரு. கோ. வீரய்யன் : துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்வது போலப் பார்த்தால் இதில் பேசுவதற்கு ஒன்றுமே இல்லை. இந்தச் சட்ட முன்வடிவில் சில ஊர்களை மேம்படுத்துவது பற்றியும், சில ஊர்களுக்கு இதை விஸ்தரிப்பது பற்றியும்தான் சொல்லி இருக்கிறது. இதிலே பேசுவதற்கு ஒன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைத் தான் நானும் சொல்கிறேன். கேளிக்கை வரிபற்றி இருக்கிற இன்னொரு சட்ட முன்வடிவையும் சேர்த்து எடுத்துக் கொண்டால் நீங்கள் கருத்துக்களைச் சொல்லலாம்.

திரு. கோ. வீரய்யன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த சட்ட முன்வடிவையும் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தச் சட்ட முன்வடிவை எடுத்துக்கொள்வதற்கு ஒரு மோஷன் மூவ் செய்ய வேண்டும்.

THIRU A. RAHMANAKAN: Sir, it is not proper. This Bill may be passed and the other Bill may be taken separately.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வேறு என்ன செய்வது, இந்த பில்லில் ஸ்கோப்பிற்குள் பேசினால் ஏற்றுக் கொள்ளலாம். பைஃபர்கேஷன் ஆஃப் டிஸ்டிரிக்ட், அன்ட் அதை ஷெடியூலில் சேர்த்துக் கொள்வது என்ற சட்ட முன்வடிவில் கேளிக்கை வரிபற்றி எப்படிப் பேசமுடியும்?

திரு. அ. ரகுமான்கான் : இந்த பில்லைப் பொறுத்த வரையில் பிரச்னை இல்லை. மற்ற பில்லில் டிடெயில்டாக பேச வேண்டும். எனவே தனித்தனியாகவே எடுத்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படியானால் இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றி விடலாம்.

(மாலை 5—40)

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1987) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஒ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1987) ** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.

திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கடன் நிவாரணச் சட்ட திருத்தம் என்பது 1986 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23-ந் தேதிக்கு அப்பால் மேலும் ஓராண்டு காலம் நீடிக்கப்படுகிறது. இப்படி நீடிக்கப் படுவதை நான் என் கட்சியின் சார்பில் வரவேற்றாலும் இதன் காரண காரிய நோக்கங்களிலே கூறப்பட்டிருப்பதை பற்றி கருத்து சொல்லவிரும்புகிறேன். இந்த சட்டத்தினுடைய

** 1987 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.